📞 04175 - 236654 / 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

NAAC "B+" GRADE

Accredited with "B+" GRADE by NAAC
Certified Under Section 2 (f) & 12 B of UGC Act 1956, An ISO 9001 - 2015 Certified Institution
Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, New Delhi
Manalurpet Road, Tiruvannamalai - 606 603, ✉ shanmugacollege@gmail.com 🌐 www.shanmugacollege.edu.in

11.03.2024

## சண்முகா கல்லூரியின் 27 ஆம் ஆண்டு ஆண்டு விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் 27 ஆவது ஆண்டு விழா நடைபெற்றது. இவ்விழாவில் கல்லூரியின் தலைவர் **எம்.என்.பழனி** தலைமை வகித்தார். செயலர் மற்றும் தாளாளர் **எல்.விஜய் ஆனந்த்** முன்னிலை வகித்தார். முன்னதாக, கல்விப்புல முதன்மையர் பேரா.**அழ.உடையப்பன்** வரவேற்புரையாற்றினார். கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே.ஆனந்தராஜ்** ஆண்டறிக்கையினைக் வாசித்தார். விழாவில் அறக்கட்டளை உறுப்பினர்கள் **எஸ்.என்.சௌந்தர்ராஜன், சீனி.கார்த்திகேயன், என்.குமார், டி.ஏ.எஸ்.முத்து, எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு கோ.இராஜேந்திரகுமார், எம்.சீனுவாசன், ஏ.டி.பி.எஸ்.கஸ்தூரி அம்மாள், எம்.சி.இரவிக்குமார், பி.கலைமணி, குமுதா அருணகிரி, சி.சசிகலா, அருள்விழி கார்த்திகேயன், பா.செந்தில்குமார், பி.அருணாதேவி** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். துணை முதல்வர் முனைவர் **கோ.அண்ணாமலை** சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்தார். நிறைவாக பொருளாளர் **ஸ்ரீதர்** நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சியினைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் **இரா.சங்கர்** தொகுத்து வழங்கினார்.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பட்டிமன்ற பேச்சாளர், எழுத்தாளர் திருமதி **பாரதி பாஸ்கர்** அவர்கள் விழாப்பேருரையில்,

கல்லூரிக்கால நட்புதான் மிக உண்மையான, நம்பிக்கையான நட்பு என்றும், வாழ்வின் எல்லாப் போராட்டங்களும் இரண்டு காதுகளுக்கு நடுவில் தான் உள்ளது. கோவில்கள் வேறுபட்டாலும் இறைவன் ஒன்று, வீடுகள் வேறுபட்டாலும் எல்லா அம்மாக்கள் ஒன்றுதான் என்றும், முடியாது என்று சொல்லிக்கொண்டே இருப்பதை விட தொடங்கிவிட்டால் முடித்து விடலாம். உலகில் ஆணும், பெண்ணும் சமம் என்பதை அனைவரும் உணரவேண்டும். பொறாமைப் படாத ஒரே சமூகம் ஆசிரியர் சமூகம் தான் என்றும், பிள்ளைகள் பட்டங்கள் பெறுவதை விட பெற்றோருக்கு நல்ல பிள்ளைகள் என்ற பெயர்களைப் பெறுவதுதான் அவர்களுக்கு மகிழ்ச்சி என்றும், **ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்** என்ற பாரதியின் கனவை உருவாக்கிட நாம் அனைவரும் உழைப்போம். ஆண் பெண் பேதமில்லாமல் நட்புணர்வோடும், புரிதலோடும் பயின்று வாழ்வில் பல சாதனைகளை நிகழ்த்த வேண்டுமெனவும் எடுத்துரைத்தார். மேலும், பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

பின்னர் நிகழ்ச்சியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை உறுப்பினர்கள், விருந்தினர்கள், பெற்றோர்கள், பத்திரிக்கை நண்பர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள், மாணவ, மாணவியர் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொண்டனர்.

செயலர் மற்றும் தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
ANNUAL DAY & SPORTS DAY


SHANMUGA INDUSTRIES ARTS AND SCIENCE COLLEGE
Accredited With "B+" Grade by NAAC
Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO 9001 : 2015 Certified Institution
NAAC
"B+" GRADE